IntSym 2019
9th International Symposium

# ஐந்து ஆளுமைப் பண்பும் இளங்குற்றவாளிகளும்: அச்சுவேலி சிறுவர் சீர்த்திருத்த பாடசாலையை அடிப்படையாக கொண்ட ஓர் ஆய்வு

ரீ. தமிழினி[283], எஸ். அஞ்சலிக்கா குமாரி[284] & ஆர். அபிராமி ராஜ்குமார்[285]

Correspondence: anjalikask@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சிறுவர்கள் நாட்டின் தலைவர்கள் என்பது நாம் அறிந்த முதுமொழி ஐக்கிய நாடுகள் சபையின் படி 18 வயதிற்க்குட்பட்ட ஆண் பெண் இருபாலரும் சிறுவர்கள் என வரையறுத்து அவர்களுக்கு கட்டாய கல்வியனை வலியுறுத்துகின்றது. ஆனால் இன்றைய பத்திரிகைகளில் பல பக்கங்களில் குற்றத்துடன் தொடர்புடையவர்களாக சிறுவர்களே காணப்படுகின்றனர்.பதினெட்டு வயதிற்கு உட்பட்ட தனியன் ஓருவரினால் சமுதாயத்தின் நலனுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய நடத்தை எந்த வகையில் இருந்தாலும் அது இளங்குற்றநடத்தை ஆகின்றது. இக்குற்றநடத்தையை மேற்கொள்வோரை 'இளம் குற்றவாளிகள்" என அழைப்பர். இளம் குற்றவாளிகள் எனும் பதத்தினை ஆங்கிலத்தில் juvenile delinquency என்பர். juvenile, delinquency எனும் சொற்களானது இலத்தீன் மொழியான juve என்பதிலிருந்து இளமையானது எனும் கருத்தினை கொண்டும் delinquanir என்பது இளமையில் செய்ய வேண்டிய விடயங்களில் இருந்து தவறுதல், கடமை வழுவுதல் எனும் கருத்தினை கொண்டும் காணப்படுகின்றது. இளங்குற்றங்களிற்கான காரணங்களையும் குறைப்பதற்கான வழிமுறைகளையும் கண்டறிய பல ஆய்வுகள் மேற்கொண்ட வண்ணம் உள்ளன. சிறுவர்கள் குற்றங்களுடன் தொடர்புபடுவதற்கான காரணங்களாக குடும்பம், சூழல், வளர்ப்பு முறை, சிறுவயது அனுபவங்கள் என பல காரணிகள் கண்டறிப்பட்டாலும் ஆளுமையின பங்கும் பல ஆய்வுகளில் வலியுறுத்தப்படுகின்றது. உளவியலை பொறுத்தவரை மனிதனது நடத்தையினை கட்டமைப்பதில் ஆளுமை பண்புகள் மிக அடிப்படையானவை என்கின்றார் உளவியலாளர் கார்ள்யுங். அதனை அடிப்படையாக கொண்டு இவ் ஆய்வானது இளங்குற்றவாளின் குற்ற நடத்தைக்கும் அவர்களது ஆளுமைக்கும் இடையிலான தொடர்பினை ஆராய்வதை பிரதான நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுக்கான மாதிரியாக யாழ்ப்பாண அச்சுவேலி சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் இருந்து 30 பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய ஆண் சிறுவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.இதற்கென ஐந்து பண்பு ஆளுமை கொள்கைகளை அடிப்படையாக கொண்ட 44 வினாக்களை கொண்ட வினாக்கொத்தின் மூலமும் நேர்காணல் முலமும் முதன்மை தரவுகள் பெறப்பட்டன. வினாக்கொத்தானது ஆய்வாளரினால் கொள்கைகளில் முன்வைக்கப்பட்ட பண்புகளை கொண்டு உருவாக்கப்பட்டது. இதன் மூலம் இளம்குற்றவாளி என நிருபிக்கப்பட்ட சிறுவர்கள் இவ் ஐந்து ஆளுமை பண்புகளில் எவ்கோணத்தில், எவற்றில் மிகைப்பெற்று விளங்குகிறார்கள் என அடையாளம் காட்டபடபயன்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகளினை spss மென்பொருள் கொண்டு தகவல்கள் பெறப்பட்டன. ஆய்வின் முடிவாக அக முகி புறமிகு தன்மையான ஆளுமை பண்பில் புறமிகு தன்மையை அதிகம் கொண்டோரும், மனசான்று தன்மை குறைவாக காணப்படுவேரும், அதிகமாக உணர்ச்சிக்கு ஆட்படும் மனநிலை உறுதியற்ற தன்மை கொண்டவர்கள் அதிகமாக குற்றங்களுடன் தொடர்புடையவர்களாகவும் இலகுவில் குற்றங்களிற்கு ஆட்படுபவர்களாகவும் இணங்காணபட்டுள்ளனர். சிறுவர்களை அவர்களது ஆளுமையினை அடிப்படையாக கொண்டு அனுகுவதன் மூலம் அவர்களை நல்வழிப்படுத்தவும் மேன்மேலும் குற்றங்களில் ஈடுபடாமல் தடுக்கவும் வழிச்செய்வதாக இவ் ஆய்வு காணப்படுகின்றது.

**பிரதான சொற்கள்:** அளங்குற்றவாளிகள், ஐந்து ஆளுமைப் பண்புகள்

## அறிமுகம் :

இந்த உலகத்தினிலே வாழும் ஒவ்வொரு மனிதர்களும் பிறக்கும் போது நல்லவர்களாகத்தான் பிறக்கின்றார்கள். அவர்களது வாழ்வின் ஒவ்வொரு வளர்ச்சிக்கட்டங்களில் ஏற்படும் பல்வேறுபட்ட மாறுதல்கள் அவர்களை வெவ்வேறுபட்ட திசை நோக்கி நகரச் செய்கின்றது.

[283] Department of Psychology, University of Jaffna, Sri Lanka.
[284] Department of Psychology, University of Jaffna, Sri Lanka.
[285] Department of Psychology, University of Jaffna, Sri Lanka.

ஆந்த வகையிலே ஒரு நாட்டினுடைய முக்கிய துண்களாக சிறுவர்கள் காணப்படுகின்றனர். ஆவர்களுடைய உளநலமானது ஆரோக்கியமானதாக காணப்படுமிடத்து நாட்டினுடைய அபிவிருத்தியும் வளமாக அமையப் பெறும். நம் பிரதேசத்தில் தற்போதைய கால கட்டத்தில் சிறுவர்களது போக்குகளானது சமுக நீதி மற்றும் சட்ட விதி மீறல்களுக்கு அப்பாற்பட்டு குற்ற நடத்தைக்கு உட்படும் தன்மையாக உருவெடுத்துள்ளது.

அந்த வகையில் உளவியலானது மனிதனை அடிப்படையாகக் கொண்ட ஒரு துறையாகும். எமது சமுகக்தைப் பொறுத்தவரை வளர்ந்து வருகின்றதும் தற்போது அதிக தேவைப்பாடு உடையதுமான ஒன்றாக இத்துறை காணப்படுகின்றது. புண்பாடு கலாச்சாரம் என்பவற்றுக்கு அப்பால் தனி மனித உள்ளத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் ஒன்றாக உள்ளது. எனவே இவ்வாய்வு எங்கு உளவியல் தேவைப்படுகின்றதோ அப்பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த விடத்து, இவ்வாள்வானது அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையிலுள்ள இளங்குற்றவாளிகளது ஆளுமைப் பண்புகள் எனும் தலைப்பில் அமைந்துள்ளது. சிறுவர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஆளுமைகூறுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இத்தகைய நடத்தைகள் சீராக காணப்பட வேண்டுமாயின் அவர்களது ஆளுமையானது சிறப்பானதாக அமைய வேண்டும். ஒவ்வொரு சிறுவர்களிடமும் காணப்படும் சிறந்த ஆளுமைப் பண்புகளே அவர்களை சமுகத்தில் சிறந்த மனிதர்களாக வாழ உதவி செய்யும்.

'அந்த வகையில் ஆளுமை என்பது ஒருவரது உள, உடல், சமுக பண்புகளின் கூட்டு இணைந்து உருவாகுவது ஆகும். இம் முன்றும் ஒருங்கினைந்து நேரானதாக இருக்கும் போது நேரிய நல்ல விழுமியங்களுடன் கூடிய ஆளுமைப்பண்புகளும் அவை எதிரானதாக அமையும் போது எதிரான ஆளுமைப் பண்புகளும் மனிதரிடையே வளர்ச்சி அடைகின்றன. இந்த எதிரான ஆளுமைப் பண்புகளே மனிதனை குற்ற நடத்தைக்கு உட்படுத்துகின்றது. ஒருவரிடம் தான் வாமும் சமுகம் பற்றிய தவறான மனப்பாங்கு, நம்பிக்கை, தன்னைப் பற்றிய தாழ்வான எண்ணங்கள், வெறுப்புக்கள் என்பனவே குற்ற நடத்தையுடன் கூடிய ஆளுமைப் பண்புகள் வளர காரணமாக உள்ளன. ஆகவே சிறுவர்களிடத் காணப்படும் எதிரான ஆளுமைப் பண்புகள் அச்சிறுவர்களை தவறான நடத்தைக்கு உட்படுத்துகின்றது. இந்த தவறான நடத்தைகள் சட்ட விதி மீறலிற்கு உட்படுமாயின் அவை இளங்குற்ற நடத்தைகளாக மாற்றம் பெறுகின்றன.

பதினெட்டு வயதிற்கு உட்பட்ட தனியன் ஒருவரினால் சமுதாயத்தின் நலனுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய நடத்தை எந்த வகையில் இருந்தாலும் அது இளங்குற்றநடத்தை ஆகின்றது. இக்குற்றநடத்தையை மேற்கொள்வோரை இளம் குற்றவாளிகள் என அழைப்பர். இளம் குற்றவாளிகள் எனும் பதத்தினை ஆங்கிலத்தில் தரளநடைந னநடனைநெரநஉல எனபர். தரளநடைநஇ னநடனைநெரநஉல எனும் சொற்களானது இலத்தீன் மொழியான தரளந என்பதிலிருந்து இளமையானது எனும் கருத்தினை கொண்டும் னநடனைநெரயடைச என்பது இளமையில் செய்ய வேண்டிய விடயங்களில் இருந்து தவறுதல்இ கடமை வழுவுதல் எனும் கருத்தினை கொண்டும் காணப்படுகின்றது.

**ஆய்வின் பயன்கள்:** ஆய்வானது உண்மையினை கண்டு பிடிப்பதற்காக மேற்கொள்ளப்படுமிடத்து அதன் முடிவுகளும் பயனுடையதாக அமைய வேண்டும் அந்த விடத்து பின்வரும் பயன்களைக் கொண்டு இவ்வாய்வு காணப்படுகின்து. இவ்வாய்வின் மூலமாக இளங்குற்றவாளிகளது குற்ற நடத்தையுடன் தொடர்புடைய ஆளுமைப் பண்புகளை அறிந்து கொள்ளலாம். குற்ற நடத்தையுடன் தொடர்புடைய ஆளுமைப்பண்புகள் தவிர ஏனைய பண்புகளை அறிய முடியும். குற்ற நடத்தையை தூண்டும் ஆளுமைப்பண்புகளை இல்லாமற் செய்வதற்கான வழிகாட்டல்களை அறிந்து கொள்ள முடியும். இளங்குற்றவாளிகளிடம் காணப்படும் விசேட ஆளுமைப் பண்புகளை வெளிக கொணர்ந்து அவர்களை நல் வாழ்வுக்கு வழிப்படுத்த உதவும். சமுகத்தினுடைய இவர்கள் பற்றிய தவறான புரிந்துணர்வை இல்லாமற் செய்து சமுதாயத்தல் இவர்களை ஏற்றுக் கொள்ள செய்வதற்கான ஆலோசனைகளை அறிந்து கொள்ளல்.

1. **ஆய்வு முறையியல்**

யாழ் மாவட்டத்தில் இளங்குற்ற நடத்தையினையுடைய இளங்குள்ளவாளிகள் கொண்டுள்ள ஆளுமைப்பண்புகள் தொடர்பாக ஓர் ஆய்வு எனும் தலைப்பினை ஆதாரமாகக்கொண்டு ஆய்வுக்கட்டமைப்பானது வடிவமைக்கப்பட்டுள்ளது. **இவ் ஆய்வின் நோக்கங்களில் பொது நோக்கமாக** தமிழ் சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லத்திலும் உள்ள இளங்குற்ற நடத்தையினை உடைய இளங்குற்றவாளிகள் கொண்டுள்ள ஆளுமைப் பண்புகளைக் கண்டறிதல் ஆகும். இப்பொதுவான நிறுவுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள சிறப்பு நோக்காக, குற்ற நடத்தையுடன் தொடர்புடைய ஆளுமைப் பண்புகளைக் கண்டறிதல் ஆகும். **ஆய்வுக்குட்படுவோர்** (மாதிரிகள்) : அச்சுவேலி சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் இளங்குற்றவாளிகள் என நிருபிக்கப்பட்டோர். (18-12 வயதிற்குற்பட்ட ஆண்கள் மட்டும்). எழுமாற்று மாதிரி தெரிவுமுறைக்கொண்டு மாதரிகள் தெரிவுசெய்யப்பட்டனர். மொத்தமாக 30 மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர்.

1.1 **ஆய்வுக்கருவிகள்**

**முதலாம் நிலைத்தரவுகள்** : முதலாம் நிலைத்தரவுகள் என்பது ஆய்வாளனால் நேரடியாக ஆய்வுக்களத்திற்குச் சென்று பெறப்படும் தரவுகளைக் குறிப்பதாகும். இது அதிகளவு நம்பிக்கை கொண்டதாகவும், உண்மைத் தன்மை உடையதாகவும் காணப்படும். இதனடிப்படையில் இவ்வாய்வுகள் அதிகமாக முதலாம் நிலைத் தரவுளை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. நேர்காணல், வினாக்கொத்து முறைகளைப் பயன்படுத்தி சீர்திருத்தப் பள்ளியிலுள்ள 30 இளங்குற்றவாளிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், காப்பாளர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், பெற்றோர் என்போரிடமிருந்து முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**வினாக்கொத்து:**


இவ்வாய்விற்காக மூன்று பகுதிகளை கொண்ட வினாக்கொத்தானது தயாரிக்கப்பட்டது. முதலாவதாக இளங்குற்றவாளிகளது தனிப்பட்ட விபரத்தை அறியும் முகமான வினாக்களும் இரண்டாவதாக இளங்குற்றவாளிகளது ஆளுமைப்பண்புகளை அளவீட்டுக்கொள்வதற்காக பண்புக்கொள்கையிலிருந்து நாற்பத்தி நான்கு ஆளுமைப்பண்புகளுடன் தொடர்புடைய வினாக்கள் தயாரிக்கப்பட்டது. இந்த நாற்பத்தினான்கு வினா அமைப்பானது ஐந்து கூற்றுக்களைக்கொண்டது. அவை முறையே உறுதியாக உடன்படவில்லை, சிறிது உடன்படவில்லை, சரியாக கூற முடியவில்லை, சிறிது உடன்படுதல், உறுதியாக உடன்படுதல் என்பனவாகும். இவற்றிற்கு முறையே பூச்சியம் தொடக்கம் நான்கு வரை புள்ளிகள் இடப்பட்டது. இந்த நாற்பத்தினான்கு பண்புகளும் ஐந்து பெரும் ஆளுமைப்பண்புகளாக வகைப்படுத்தப்பட்டது. ஐந்து பண்புகளும் நேரான, எதிரான பண்புகளைக் கொண்டுள்ளது. அதனடிப்படையில் புள்ளிகள் கணக்கிடப்பட்டு குறித்த நபர் எவ்வகையான ஆளுமைப்பண்புடன் காணப்படுகின்றார் என்பது அறியப்படும். வினாக்கொத்தினுடைய 44 வினாக்களும் இலக்கங்களுடன் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையிலேயே புள்ளிகளும் வழங்கப்பட்டது.

**இரண்டாம் நிலைத்தரவுகள்**: ஆய்வாளன் தன்னுடைய ஆய்வுச்செயற்பாட்டிற்கான தரவுகளை ஆய்வுக்களத்திற்கு நேரடியாகச்சென்று தகவல்குளைச் சேகரித்துக் கொள்ளாது முற்கூட்டியே பல்வேறு நோக்கங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு ஆய்வாளன் தனது ஆய்வுச் செயற்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளும் போது அது இரண்டாம் நிலைத்தரவுகள் எனப்படுகிறது. இங்கு ஏற்கனவே வெளியிடப்பட்ட புத்தகங்கள், ஆய்வறிக்கைகள், சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்படும் தகவல்களைக் குறிக்கும். ஆக இவ்வாய்விற்காக பயன்படுத்தப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகளாக,


இளங்குற்றவாளிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள், இளங்குற்றற நடத்தை தொடர்பான நூல்கள் உளவியற்கொள்கைகள் சார் நூல்கள் ஆளுமை சார் நூல்கள், சிறுவர் சட்டங்கள் தொடர்பான நூல்கள், அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**தரவுப்பகுப்பாய்வு:**


*கருதுகோளை அடிப்படையாகக் கொண்டவை ( மாதிரிகளின் அக முக புற முக பண்பு வீதம்)*





*கருதுகோளை அடிப்படையாகக் கொண்டவை (அனுபவங்கள் மீதான திறந்த மனப்ங்கு ஆளுமை பண்பு வீதம்)*




*கருதுகோளை அடிப்படையாகக் கொண்டவை ( பிறருடன் ஒத்துப்போகும் ஆளுமை பண்பு வீதம்)*




*கருதுகோளை அடிப்படையாகக்*




*கொண்டவை ( மனச்சாட்சியுடனான நடத்தை ஆளுமையின் வீதங்கள்)*

## 2. ஆய்வின் முடிவுகள் கலந்துரையாடல்

தமிழ் சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லத்திலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட 30 இளங்குற்றவாளிகளில் 18 பேர் புறமுகப்பண்பு உடையவர்களாகவும், 12 பேர் அகமுகப்பண்பு உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். புறமுகப்பண்பு உடையவர்கள் 60 வீதமாகவும், அகமுகப்பண்பு உடையவர்கள் 40 வீதமாகவும் உள்ளனர். மேலும் 30 இளங்குற்றவாளிகளில் 12 பேர் ஒத்துப்போதல் பண்பு கூடியவர்களாகவும், 18 பேர் ஒத்துப்போகும் பண்பு குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். ஒத்துப்போகும் பண்பு கூடிய இளங்குற்றவாளிகள் 40 மூ வீதத்தினராகவும், ஒத்துப்போகும் பண்பு குறைந்தவர்கள் 60மூ விதத்தினராகவும் உள்ளனர். அதே வேளை 30 இளங்குற்றவாளிகளில் 23 பேர் அனுபவங்கள் மீது திறந்த மனப்பாங்கு பண்பு கூடியவர்களாகவும், 7 பேர் அனுவவங்கள் மீது திறந்த மனப்பாங்கு பண்பு குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.இவர்களுடைய வீதங்கள் முறையே 77மூ வீதமாகவும், 23மூ வீதமாகவும் உள்ளது. தெரிவு செய்யப்பட்ட 30 இளங்குற்றவாளிகளில் 21 பேர் உணர்ச்சிப்பக்குவ பண்பு குறைந்தவர்களாகவும், 9 பேர் உணர்ச்சிப்பக்குவ பண்பு கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். உணர்ச்சிப்பக்குவ பண்பு கூடியவர்கள் 30மூ வீதத்தினராகவும், உணர்ச்சிப்பக்குவ பண்பு குறைந்தவர்கள் 70மூ வீதத்தினராகவும் உள்ளனர். தமிழ் சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லத்திலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட 30 இளங்குற்றவாளிகளில் 9 பேர் அதிக மனச்சாட்சி பக்குவ பண்பு கொண்டவர்களாகவும், 21 பேர் மனச்சாட்சி பக்குவ பண்பு குறைவாகக கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். மனச்சாட்சி பண்புடையவர்கள் 70மூ வீதத்தினராகவும், மனச்சாட்சிப்பண்பு குறைந்தவர்கள் 30மூ வீத்தினராகவும் காணப்படுகின்றனர்.

## 3. முடிவு

தமிழ் சான்று பெற்ற பாடசாலையும் - தடுப்பு காவல் இல்லத்திலுமுள்ள இளங்குற்றவாளிகள் அகமுகப் பண்பினை விட புறமுகப் பண்பினை அதிகமாகக் கொண்டிருப்பார்கள்: சிறுவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட தரவின் அடிப்படையில் குற்ற நடத்தையுடன் விளங்கும் இளங்குற்றவாளிகளில் புறமுகப் பண்பானது அதிகமாக காணப்படுவதனால் இளங்குற்றவாளிகள் அகமுகப் பண்பினை விட புறமுகப் பண்பானது அதிகமாகக் காணப்படும் என்ற முதலாவது கருதுகோளானது உண்மையாகக் காணப்படுகின்றது. அத்துடன் குற்றச் செயலிற்கு அதிகமாக புறமுகிகளே உட்படுகின்றனர் என்பதனையும் இதனூடாக அறிய முடிகின்றது.

சான்று பெற்ற பாடசாலையும் தடுப்புகாவலிலுமுள்ள இளங்குற்றவாளிகளில் மனச்சாட்சிக்குட்பட்ட பண்பானது மிகவும் குறைவாகக் காணப்படுதல் : தமிழ் சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லத்திலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட 30 இளங்குற்றவாளிகளில் 9 பேர் அதிக மனச்சாட்சிப்படி நடத்தல் பண்பு கொண்டவர்களாகவும், 21 பேர் மனச்சாட்சிபடி நடத்தல் பண்பு குறைவாகக் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். மனச்சாட்சிப்படி நடப்போர் 30 வீதமாகவும், மனச்சாட்சிப்படி நடக்காதோர் 70 வீதமாகவும் உள்ளனர். ஆகவே தரவுப் பகுப்பாய்வின் படி இளங்குற்ற நடத்தையினை உடையவர்கள் மனச்சாட்சிக்குறபட்ட பண்பினை குறைவாகவே கொண்டுள்ளனர். எனவே சான்று பெற்ற பாடசாலையிலுள்ள குற்ற நடத்தையுடன் கூடிய இளங்குற்றவாளிகளில் மனச்சாட்சிக்குட்பட்ட பண்பானது மிகவும் குறைவாகவே காணப்படும் என்ற இக்கருதுகோளானது உண்மை என நிருபிக்கப்படுகின்றது. இதனூடாக குற்ற நடத்தையில் ஈடுபடும் இளங்குற்றவாளிகள் மனச்சாட்சிபடி நடக்கும் பண்பானது மிகவும் குறைவாகவே காணப்படும் என்பதனை அறிய முடியும்.

சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவலிலுமுள்ள இளங்குற்றவாளிகள் உணர்ச்சிப்பக்குவம் குறைந்த பண்பினை கொண்டிருத்தல் : தமிழ் சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லத்திலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட 30 இளங்குற்றவாளிகளில் 21 பேர் அதிக குறைந்த உணர்ச்சிப்பக்குவ பண்பு கொண்டவர்களாகவும், 9பேர் நிலையான உணர்ச்சிப்பக்குவ பண்பு கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர் .நிலையான உணர்ச்சிப்பக்குவ பண்பு கொண்டோர்

30 வீதமாகவும், உறுதியான உணர்ச்சிப்பக்குவ பண்பு கொண்டோர் 70 வீதமாகவும் உள்ளனர். ஆகவே தரவுப் பகுப்பாய்வின் படி இளங்குற்ற நடத்தையினை உடையவர்கள் உறுதியான உணர்ச்சிப்பக்குவ பண்பினை குறைவாகவே கொண்டுள்ளனர். எனவே சான்று பெற்ற பாடசாலையிலுள்ள குற்ற நடத்தையுடன் கூடிய இளங்குற்றவாளிகளில் உணர்ச்சிப்பக்குவ பண்பானது மிகவும் குறைவாகவே காணப்படும் என்ற இக்கருதுகோளானது உண்மை என நிருபிக்கப்படுகின்றது. இதனூடாக குற்ற நடத்தையில் ஈடுபடும் இளங்குற்றவாளிகளில் உணர்ச்சிப்பக்குவ பண்பானது மிகவும் குறைவாகவே காணப்படும் என்பதனை அறிய முடிகின்றது.

சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவலிலுமுள்ள இளங்குற்றவாளிகளிடம் ஒத்துப்போகும் பண்பானது குறைவாக காணப்படுதல்: தமிழ் சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லத்திலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட 30 இளங்குற்றவாளிகளில் 12 பேர் ஏற்றுக்கொள்ளும் பண்பு உடையவர்களாகவும், 18 பேர் ஏற்றுக்கொள்ளும் பண்பு குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். ஏற்றுக்கொள்ளும் பண்பு உடையவர்கள் 40 வீதமாகவும், ஏற்றுக்கொள்ளும் பண்பு குறைந்தோர் 60 வீதமாகவும் உள்ளனர். ஆக இளங்குற்றவாளிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட தரவின் அடிப்படையில் குற்ற நடத்தையுடன் விளங்கும் இளங்குற்றவாளிகளில் ஏற்றுக்கொள்ளும் பண்பினை குறைவாக கொண்டவர்களே அதிகமாக காணப்படுவதனால் இளங்குற்றவாளிகள் ஏற்றுக்கொள்ளும் பண்பினை விட குறைவான ஏற்றுக்கொள்ளும் பண்பினையே அதிகமாகக் கொண்டிருப்பர் என்ற கருதுகோளானது உண்மையாகக் காணப்படுகின்றது. அத்துடன் இளங்குற்றவாளிகளில் ஏற்றுக்கொள்ளும் பண்பானது குறைவாகக் இருக்கும் என்பதனையும் இதனூடாக அறிய முடிகின்றது.

சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவலிலுமுள்ள இளங்குற்றவாளிகளிடம் திறந்த மனப்பாங்கு அதிகமாக காணப்படுதல்: தமிழ் சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லத்திலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட 30 இளங்குற்றவாளிகளில் 23 பேர்அனுபவத்தின் மேல் திறந்தமனப்பாங்கு கூடிய பண்பினை உடையவர்களாகவும், 7 பேர் அனுபவத்தின் மீது திறந்த மனப்பாங்கு குறைந்த பண்பினை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். திறந்த மனப்பாங்கு பண்பு உடையவர்கள் 76.7வீதமாகவும், திறந்த மனப்பாங்கு குறைந்த பண்பு கொண்டோர் 23.3 வீதமாகவும் உள்ளனர். ஆக இளங்குற்றவாளிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட தரவின் அடிப்படையில் குற்ற நடத்தையுடன் விளங்கும் இளங்குற்றவாளிகளில் அனுபவத்தின் மீது திறந்த பண்பினை அதிக நபர்கள் கொண்டு காணப்படுகின்றனர். இளங்குற்றவாளிகளில் குறைவான அனுபவத்தின் மீது திறந்த மனப்பாங்கு பண்பினை விட இப்பண்பினை அதிகமாகக் கொண்டிருப்பர் என்ற கருதுகோளானது உண்மையாகக் காணப்படுகின்றது. அத்துடன் இளங்குற்றவாளிகளில் அனுபவத்தின் மீது திறந்த பண்பு அதிகமாக் இருக்கும் என்பதனையும் இதனூடாக அறிய முடிகின்றது.

**உசாத்துணைகள்**

இராசேந்திரன்,ரா.(2000).*சமூகப்பிரச்சனை.* இலங்கை: பக் 96 99

கலாநிதி சபா, ஜெயராசா .(2000). குழந்தை உளவியலும் கல்வியும்:

கார்ல் காரிசன் சி.(1964).இளையோர் உளவியல். பக் 719.

ஆ.எ.றிச்சேட்(2006),சமூக பொருண்மைகள்,பக் 27

டாக்டர்.எம். திருநாவுக்கரசு,குழந்தைகள் மனநலம், பக் 71‡72

Donet. L,(1951).Psychiatric Aspects of Juvenile Delinquency; World health organization monograph series No.2.Geneva; world health organization.

Durea.M.A and Assum.A.L.(1948).The eliability of Personality Traits Differentiating Delinquent and Non Delinquent Girls;Journal of Genetic Psychology.pp 307- 311

Fertman.M.H(1939).Differentiating personality Characteriestics of Delinquent Girl.ohio State university

Hewitt.E, R, L, Jenis,(1941)Case studies of Aggressive Delinquents;American journal of orthopsychiatry.

Nasim Mousavi, Banafsheh Gharaee, Ahmoad Ashouri, Mojtaba Habibi.(20140.the personality of juvenile delinquency.

Night gul Tahira jabeen(2015) Big Five personality Factors contribution in smuggling crime, Pakistan Association of Anthrology, Islamabad Pakistan.

Nidhi jani ph student cmj uni Meghalaya.(2012).Comparative study of personality of juvenile delinquent and normal children, International Journal of Research in social Sciences and humanities.

Asia Kausar*, Masood Nadeem, Misbah Rasheed, Fozia Amin, Samar Fahd, Muhammad Usman, Fatima Khurram, Sadia Saleem, International Conference on Business, Economics, Management and Behavioral Sciences (ICBEMBS'2012) Jan. 7-8, 2012 Dubai

Schwartz, M., & Johnson, J. H. (1985). Psychopathology of Childhood: A Clinical –Experimental Approach. (2nd ed). Pergamon General Psychology Series, pg 309.

Trojanowioz, R. C., & Morash, M. (1992). Cited in Marija Snieckute (1998). Juvenile delinquency and the family, sociologist, .Penki Kontinentai, Ltd. http://www.sociumas. It/Eng/Nr16/nepilnameciai.asp.

Sutherland, E. H., & Cressey, D. (1970). Criminology. (8th ed). Philadelphia: Lippincott. pp. 77-79.

Vinkers, D. J., & Duits, N. (2011). Crime and mental disorders among native Dutch and ethnic minority juvenile defendants in the Netherlands. International Journal of Law and Psychiatry 34, 131–134.